**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 செங்கல்பட்டு</u>**

**<u>சிசி எண்- 88|2017</u>**

**அ.சா.1 திரு.செல்வராஜ் த|பெ. மதனகோபால் நாள்-22.01.2020**

**சாட்சி மனுவின் பேரில் அனுமதிக்கப்பட்டு மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை.**

வழக்கு சம்மந்தப்பட்ட இடமானது நஞ்சை நிலமாக இருந்து மனை பிரிவுகளாக பிரிக்கப்பட்ட மனையிடமாகும். அதற்கு காமராஜர் நகர் என பெயரிடப்பட்டுள்ளது. காமராஜர் நகர் உருவாவதற்கு முன்பு நிலம் யாருக்கு சொந்தம் என்று தெரியுமா என்றால் எனக்கு அந்த விவரம் தெரியாது. அதுபற்றி எனக்கு விவரம் தெரியாது. பொதுவாக நஞ்சை நிலங்கள் மனைபிரிவுகளாக பிரிக்கப்படும் பொழுது லேஅவுட் போடப்பட்டு அந்த இடத்திற்கான பாதைகள் பொது இடங்கள் அவ்விடம் கட்டப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு தானமாக கொடுக்கப்படும் என்றால் சரிதான். அவ்வாறு தானம் கொடுத்த பின்புதான் வரைபடம் ஒப்புதல் வழங்கப்படும் என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமான பாதை இடங்கள் சிட்லபாக்கம் செயல் அலுவலரின் மூலம் பதிவு செய்யபடவேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்பட்டிருந்தால் எங்களுக்கு விவரம் தெரிந்திருக்கும் என்றால் சரிதான். நான் அந்த புகாரினை கொடுக்கும் பொழுது அந்த ஆவணங்கள் குறித்து நான் எதுவும் குறிப்பிட்டிருந்தேனா என்றால் ஆவணங்கள் எதுவும் நான் பார்க்கவில்லை. நான் உயர்நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் தான் புகார் கொடுத்தேன். மற்ற விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் கூறிய ஆர்பிடி எண். 3224/2000 மற்றும் 3326/2000 எண்கள் எங்கள் அலுவலக பதிவேட்டின் வரிசை எண்கள் ஆகும். அந்த இரு எண்களும் இருவேறு மனுக்களுக்கு கொடுக்கப்பட்ட எண்களாகும். இந்த இரு எண்களும் 1ம் எதிரியின் மனுவிற்கு வழங்கப்படவில்லை. பொதுவாக பட்டா வேண்டி மனு தாக்கல் செய்யப்படவேண்டும். 1ம் எதிரி பட்டா பெறுவதற்காக மனுக்கள் ஏதேனும் தாக்கல் செய்திருந்தாரா என்றால் எனக்கு தெரியாது. அதசாஆ 3, 4 ம் எங்கள் அலுவலகத்தில் வழங்கப்படும் படிவங்கள் இல்லையென்று நான் கூறியுள்ளதற்கு ஆதாரமாக நிபுணர்களின் அறிக்கை எதுவும் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. எனக்கு பட்டா உள்ள தாள்களை பார்த்தால் அதனின் உண்மை தன்மை குறித்து கூற இயலுமா என்றால் இயலும். அ.சா.2 எங்கள் அலுவலகத்தால் வழங்கப்பட்ட தாள் இல்லையென்பதை நிரூபிக்க எங்கள் அலுவலகத்தில் இருந்த அசல் படிவங்களை ஒப்பீடு செய்வதற்காக நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதசாஆ 3, 4 ஆவணங்கள் தாம்பரம் உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு அதுகுறித்து தெரியாது. நான் தாக்கல் செய்த இந்த இரு பட்டாக்களும் எனக்கு எப்படி கிடைத்தது என்றால் எங்களது அலுவலக கோப்பில் இருந்ததை எடுத்து

ஒப்படைத்தேன். எங்கள் அலுவலக கோப்பிற்கு எவ்வாறு இந்த பட்டாக்கள் வந்தன என்பது பற்றி எனக்கு தெரியாது. அந்த பட்டாவானது நத்தம் பட்டாவாகும். கிராம நத்தம் பட்டாக்களில் பின்புறம் இடத்தின் வரைபடம் இருக்க வேண்டும். அதசாஆ 3, 4 பட்டாவில் கிராம நத்தம் பட்டா என எதை பார்த்து கூறினேன் என்றால் நிலத்தின் அளவை வைத்து தான் கூறினேன். விளைநிலம் என்றால் அதிக இடமிருக்கும். அந்த பட்டாக்களில் கிராம நத்தம் என்று எங்கும் குறிப்பிடபடவில்லை. அதசாஆ 3, 4 பட்டாக்கள் எந்த அலுவலரால் வழங்கப்பட்டது என்றால் எனக்கு பெயர் தெரியவில்லை. அதசாஆ3, 4 பட்டா பெறுவதற்கு 1ம் எதிரியால் கொடுக்கப்பட்ட மனுக்கள் என்னால் தாக்கல் செய்யப்படவில்லையென்றால் சரிதான். அவ்வாறு மனு செய்திருந்தால் எங்கள் அலுவலக கோப்பில் கண்டிப்பாக இருக்கும். 1ம் எதிரி மனு செய்யவில்லை என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பட்டா இருந்த தாள்கள் எங்கள் அலுவலக தாள்கள் இல்லையென கூறுவதற்கு எனக்கு நிபுணத்துவம் சான்றுகள் எதுவும் பெற்றுள்ளேனா என்றால் தனியே இல்லை. எங்கள் அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட பயிற்சிகள் மூலம் தெரிந்து கொண்டேன். அந்த இரு பட்டாக்களையும் பட்டாக்களின் உண்மை தன்மை அறிய நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. எனக்கு நிபுணத்துவம் கிடையாது என்றும் நான் வழக்கிற்காக வேண்டி பொய்யான தகவலை நீதிமன்றத்தில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. அதசாஆ 3, 4 பட்டாக்கள் தாம்பரம் நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்படும் பொழுது அது பொய்யான ஆவணங்கள் என்று எங்கள் அலுவலகத்திலிருந்து யாராவது ஆட்சேபனை செய்தார்களா என்றால் இல்லை. நான் எனது உயர் அதிகாரிகளின் அமுத்தத்திலிருந்து எனக்கு சரியான தகவல் எதுவும் தெரியாத நிலையில் தவறான புகார் கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. எனக்கு புகார் கொடுக்க எவ்வித முகாந்திரமும் இல்லையென்றால் சரியல்ல. அதசாஆ 3, 4 ஆவணங்கள் பின்புறமாக எதுவும் எழுதப்படாததால் போலியானவை என்று நான் கூறுவதற்கு ஆதாரமாக எங்கள் அலுவலகத்தில் அந்த காலகட்டத்தில் வழங்கப்பட்ட பட்டாக்கள் ஏதாவது ஒப்பீடு பார்க்க தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பொதுவாக ஒரே கிராமத்தில் பல்வேறு இடங்களில் நிலம் வைத்திருந்தாலும் அந்த ஒரு நபருக்கு ஒரே பட்டாவின் அந்த புல எண்கள் குறிப்பிடப்பட்டு ஒரு பட்டா எண் மட்டுமே வழங்கப்படும் என்றும், ஆனால் அதசாஆ 3, 4 ல் ஒரே கிராமத்தில் கண்ட இருவேறு புல எண்களுக்கு இரண்டு பட்டாக்கள் வழங்கியதாக தாக்கல் செய்ததே தவறானது என்பதாலும் நான் போலியானது என்று கூறினேன். சிட்லபாக்கம் கிராமத்தில் ஒருவருக்கு 7 மனையிடங்கள் வெவ்வேறு இடங்களில் இருந்தால் அவருக்கு ஒரே பட்டாவின் கீழ் அந்த மனை இடங்களையும் புல எண்கள் குறிப்பிட்டு ஒரு பட்டா மட்டுமே வழங்கப்படும். அவ்வாறு தனிதனியாக பட்டா வழங்ககூடாது. ஏற்கனவே ஒருவருக்கு இருக்கும் பட்டாவில் அவர் புதியதாக கிரையம் பெறும் அடிமனையின் புல எண்ணும் சேர்த்து தான் வழங்குவோம். அந்த தனி நபர் அவருக்கு ஏற்கனவே இருக்கும் பட்டா விபரங்கள் எதுவும் குறிப்பிடாமல் மனு செய்து தனியே பட்டா பெற்றிருந்தாலும் விசாரணையில் தெரிய வரும் போது அந்த பட்டாவை ரத்து செய்து பழைய பட்டாவுடன் இணைத்துவிடுவோம். ஆகையால் அது போன்றே இரு வேறு பட்டாக்கள் வழங்குவதற்கு வாய்ப்புள்ளது என்றால் மறைத்து பெற்றிருந்தால் வாய்ப்புண்டு.

**மறு விசாரணை** இல்லை.

Sd/(xxxx)

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. xxxx
Judicial Magistrate No.I,
Chengalpattu.